www.Padasalai.Net www.TrbTnpsc.com

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024

தேர்வு எண்.

காலம் : 3.00 மணி **XII – பொருளியல்** மதிப்பெண் : 90

## பகுதி - 1

குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (20×1=20)
2) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பொருளியல் பாடத்தின் கிளைகள்
   அ) சொத்து மற்றும் நலமம் ஆ) உற்பத்தி மற்றும் நுகர்வு
   இ) தேவை மற்றும் அளிப்பு ஈ) நுண்ணியல் மற்றும் பேரியல்
2. இருதுறை மாதிரியில் உள்ள துறைகள்
   அ) குடும்பங்களும், நிறுவனங்களும்
   ஆ) தனியார் மற்றும் பொதுத்துறை
   இ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு துறைகள்
   ஈ) நிறுவனங்களும், அரசும்
3. எத்தனை முறைகளால் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?
   அ) இரண்டு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) நான்கு
4. ________ ஆல் தேசிய வருவாயை வகுத்தால் தலைவீத வருமானம் கண்டறியலாம்
   அ) உற்பத்தி ஆ) நாட்டின் மக்கள்தொகை
   இ) செலவு ஈ) GNP
5. வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் பற்றிய கீன்ஸின் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்து ________ ஆகும்
   அ) தொகுத் தேவை ஆ) தொகு அளிப்பு
   இ) விளைவித் தேவை ஈ) இறுதிநிலை நுகர்வு விருப்பு
6. தொகு தேவையின் கூறு ________ ஆகும்
   அ) தனிநபர் தேவை ஆ) அரசுச் செலவு
   இ) ஏற்றுமதி மட்டும் ஈ) இறக்குமதி மட்டும்
7. கீன்ஸின் நுகர்வுச் சார்பு C=10+0.84ஆக இருந்து செலவிடக் கூடிய வருமானம் ₹.1,000 ஆக இருந்தால், நுகர்வு எவ்வளவு?
   அ) ₹.0.8 ஆ) ₹.800 இ) ₹.810 ஈ) ₹.0.81
8. வருவாய் உயர்ந்தால் நுகர்வு ________
   அ) குறையும் ஆ) மாறாது இ) ஏறி இறங்கும் ஈ) உயரும்
9. காகிதப்பண முறையை மேலாண்மை செய்வது
   அ) மைய பணவியல் அமைப்பு ஆ) மாநில அரசு
   இ) மைய அரசு ஈ) வங்கிகள்
10. ________ பணவீக்கம் பொருளாதாரத்தை எந்த வகையிலும் பாதிக்காது
    அ) நடக்கும் ஆ) ஓடும் இ) தவழும் ஈ) தாவும்
11. மைய வங்கி நாட்டின் ________ அதிகார அமைப்பு
    அ) பணவியல் ஆ) நிதியியல் இ) கூலி ஈ) தேசிய வருவாய்
12. ஏற்றுமதி, இறக்குமதி வங்கி துவங்கப்பட்டது
    அ) ஜூன் 1982 ஆ) ஏப்ரல் 1982
    இ) மே 1982 ஈ) மார்ச் 1982
13. ஏற்றுமதி நிகரம் என்பது
    அ) ஏற்றுமதி x இறக்குமதி ஆ) ஏற்றுமதி + இறக்குமதி
    இ) ஏற்றுமதி–இறக்குமதி ஈ) பணிகள் ஏற்றுமதி
14. பன்னாட்டு பண நிதியம் கீழ்க்கண்ட இந்த மாநாட்டில் உருவாக்கப்பட்டது ________
    அ) பாண்டுங் மாநாடு ஆ) சிங்கப்பூர் மாநாடு
    இ) பிரிட்டன்வூட்ஸ் மாநாடு ஈ) தோகா மாநாடு
15. ஆசியான் கூட்டங்கள் ________ ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்
    அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5
16. GST இதற்கு சமம்
    அ) விற்பனை வரி ஆ) தொழிற்குழும வரி
    இ) வருமான வரி ஈ) உள்ளாட்சி வரி
17. நிதிக்குழு நிர்ணயம் செய்வது எது?
    அ) இந்திய அரசின் நிதியினை
    ஆ) நிதி வளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல்
    இ) பல்வேறு துறைகளுக்கு நிதியை மாற்றுதல்
    ஈ) மேலே கூறப்பட்ட எதுவுமில்லை



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

18. கார நிலம் அதிகமாக காணப்படும் சமவெளி எது?
அ) சிந்து கங்கை ஆ) வட இந்திய
இ) கங்கை ஈ) மேற்கூறிய அனைத்தும்
19. பொருளாதார வளர்ச்சி ________ஐ அளவிடுகிறது
அ) உற்பத்தி திறன் வளர்ச்சி ஆ) பெயரளவு வருமான அதிகரிப்பு
இ) உற்பத்தி அதிகரிப்பு ஈ) இவை எதுவுமில்லை
20. ஒட்டுறவு என்ற கருத்தினை முதலில் பயன்படுத்தியவர்
அ) நியூட்டன் ஆ) பியர்ஸன் இ) ஸ்பியர்மேன் ஈ) கால்டன்

## பகுதி - 2

***குறிப்பு: ஏதேனும் 7 வினாவிற்கு விடையளி. (அவற்றில் கட்டாயவினா 30) (7x2=14)***

21. பொருளாதாரம் என்பதன் பொருள் யாது?
22. தனிநபர் வருமானம் என்றால் என்ன?
23. முடுக்கி - வரையறு.
24. தேக்கவீக்கம் என்றால் என்ன?
25. வாணிப செலுத்துநிலை பற்றி நீவிர் அறிவது யாது?
26. பொதுசந்தை - வரையறு.
27. 'வரி', 'கட்டணம்' - வேறுபடுத்துக.
28. கரியமில வாயுவை அதிகமாக வெளியேற்றும் நாடுகள் யாவை?
29. பொருளாதார திட்டமிடலின் வரைவிலக்கணம் எழுதுக.
30. உடன்தொடர்பு - வரையறு.

## பகுதி - 3

***குறிப்பு: ஏதேனும் 7 வினாவிற்கு விடையளி. (அவற்றில் கட்டாயவினா 40) (7x3=21)***

31. இருதுறை சுழல் ஓட்ட மாதிரியினை விளக்குக.
32. தேசிய வருவாயின் பயன்களை பட்டியலிடுக.
33. கீன்ஸின் கோட்பாட்டை தொடர் வரைபடம் (Flow Chart) மூலம் விளக்குக.
34. உலோகப் பணம் பற்றி ஒரு குறிப்பு வரைக.
35. வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.
36. பிரிக்ஸ் மாநாடு 2018ன் நிகழ்ச்சி நிரல் பற்றி எழுதுக.
37. முதன்மை பற்றாக்குறை என்றால் என்ன?
38. வறுமையின் நச்சி சுழற்சிக்கான காரணங்களை வரைபடத்துடன் தெளிவுபடுத்துக.
39. பின்வரும் விவரங்களுக்கு திட்ட விலக்கம் காண். 14, 22, 9, 15, 20, 17, 12, 11
40. கடன் கட்டுப்பாட்டு முறைகளைக் கூறுக.

## பகுதி - 4

***குறிப்பு:அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (7x5=35)***

41. (அ) பேரின பொருளியலின் பரப்பெல்லையை விவரி.

***(அல்லது)***

(ஆ) ஒப்புமை செலவுக் கோட்பாட்டினை விவரி.

42. (அ) தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள் யாவை?

***(அல்லது)***

(ஆ) இந்திய சமூக, பொருளாதார மேம்பாட்டில் டபிள்யூ-டி-ஓ வின் பங்கினை விவாதிக்க.

43. (அ) J.B.சே விதியின் விளைவுகளைப் பற்றி குறிப்பு வரைக.

***(அல்லது)***

(ஆ) மறைமுக வரியின் நன்மைகள் யாவை?

44. (அ) கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.

***(அல்லது)***

(ஆ) நீடித்த அல்லது வளம்குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக.

45. (அ) வணிகச் சுழற்ச்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.

***(அல்லது)***

(ஆ) பொருளாதார முன்னேற்றத்தை தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகளை விவாதிக்கவும்.

46. (அ) வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக.

***(அல்லது)***

(ஆ) புள்ளியியலின் இயல்பு மற்றும் எல்லைகளை விளக்குக.

47. (அ) பொருளாதார ஆய்வில் சமூக கணக்கிடுதலின் அவசியத்தை விவாதி.

***(அல்லது)***

(ஆ) கூட்டாட்சி நிதியின் கொள்கைகளை விளக்குக.



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com